செய்தி வெளியீட்டு எண்.79 நாள்: 24.1.2011

**<u>தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் பதவி உயர்வு ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.</u>**

சத்துணவு அமைப்பாளர்கள் – அங்கன்வாடி பணியாளர்கள் நடத்திய மாநாட்டில் வைத்த கோரிக்கையை அன்றே ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்நிகழ்ச்சியிலேயே தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் சமூகநலத்துறையில் பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர், மேலும் தகுதிபெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை–II ஆகிய பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, சத்துணவு அமைப்பாளர்களுக்கு முதன்முறையாக வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக, இன்று (24.1.2011) புதிய தலைமைச் செயலகத்தில் 40 சத்துணவு பணியாளர்களுக்கு அலுவலக உதவியாளர்களாக பதவி உயர்வு ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையில் சிறப்பாக செயல்பட்ட 294 அங்கன்வாடி பணியாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகையையும், விருதுகளையும் வழங்க முடிவு எடுக்கப்பட்டது, அதில் அடையாளமாக இன்று 5 அங்கன்வாடி பணியாளர்களுக்கு பரிசுத் தொகைகளையும், விருதுகளையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் சென்னை, கடலூர், தர்மபுரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், தூத்துக்குடி, நீலகிரி மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட ஆணையரகம் ஆகிய இடங்களுக்கு மொத்தம் 8 புதிய வாகனங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன், சமூகநலத்துறைச் செயலாளர் திரு.மோகன் பியாரே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சிறப்பு ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திருமதி. மீனாட்சி ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.